# டிசம்பர் – 13 – வியாழன்

**புனித லூசியா**

**ஆண்டவராகிய நான் அவர்களுக்கு பதிலளிப்பேன்'' (எசாயா 41: 1 )**

---

## முதல் வாசகம் : ஏசாயா 43 : 13 – 20

நானே இறைவன் எந்நாளும் இருப்பவரும் நானே. என் கையிலிருப்பதைப் பறிப்பவர் எவருமில்லை. நான் செய்ததை மாற்றியமைப்பவர் எவர்? இஸ்ரயேலின் தூயவரும் உங்கள் மீட்பருமான ஆண்டவர் கூறுவது இதுவே உங்கள் பொருட்டுப் பாபிலோனுக்கு ஆள்களை அனுப்பி, அதன் தாழ்ப்பாள்கள் அனைத்தையும் தகர்த்துவிடுவேன் கல்தேயரின் மகிழ்ச்சிப்பாடல் புலம்பலாக மாறும். நானே உங்கள் தூயவரான ஆண்டவர் இஸ்ரயேலைப் படைத்தவர் உங்கள் அரசர். கடலுக்குள் வழியை ஏற்படுத்தியவரும், பொங்கியெழும் நீர்நடுவே பாதை அமைத்தவரும், தேர்களையும், குதிரைகளையும், படைவீரரையும், வலிமைமிக்கோரையும் ஒன்றாகக் கூட்டி வந்தவரும், அவர்கள் எழாதவாறு விழச்செய்து, திரிகளை அணைப்பதுபோல் அவர்களை அழித்தவருமாகிய ஆண்டவர் கூறுவது இதுவே. முன்பு நடந்தவற்றை மறந்துவிடுங்கள் முற்கால நிகழ்ச்சிபற்றிச் சிந்திக்காதிருங்கள். இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன் இப்பொழுதே அது தோன்றிவிட்டது நீ அதைக் கூர்ந்து கவனிக்கவில்லையா? பாலை நிலத்தில் நான் பாதை ஒன்று அமைப்பேன் பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன். காட்டு விலங்குகளும் என்னைப் புகழும் குள்ள நரிகளும், தீக்கோழிகளும் என்னைப் பெருமைப்படுத்தும் ஏனெனில், தேர்ந்தெடுக்கப்பட்ட என் மக்களுக்குப் பாலைநிலத்தில் குடிக்கக் கொடுப்பேன் பாழ்நிலத்தில் நீரோடைகள் தோன்றச் செய்வேன்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர்

## நற்செய்தி : மத்தேயு 11 : 11 - 15

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : ”மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை. ஆயினும் விண்ணரசில் மிகச் சிறியவரும் அவரினும் பெரியவரே என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். திருமுழுக்கு யோவானின் காலமுதல் இந்நாள்வரையிலும் விண்ணரசு வன்மையாகத் தாக்கப்படுகின்றது. தாக்குகின்றவர்கள் அதைக் கைப்பற்றிக் கொள்கின்றனர். திருச்சட்டமும் எல்லா இறைவாக்கு நூல்களும் யோவான் வரும்வரை இறைவாக்குரைத்தன. உங்களுக்கு விருப்பம் இருந்தால் வரவேண்டிய எலியா இவரே என ஏற்றுக்கொள்வீர்கள். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்” என்றார்.

**தியானம்:** முதல் வாசகம் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட நாள் தொடக்கம் கானான் தேசத்திற்கு வந்து புறவினத்தாரால் சிறைபிடிக்கப்படும் நாள்வரை கடவுள் இஸ்ராயேல் மக்களுக்கு அதியங்களினூடாக கடவுளின் பேரன்பையும், வல்லமையையும் அவர்கள் கண்டார்கள். அதேபோல் இப்போதும் அவர்கள் விடுவிக்கப்படுவா் என்பதையும் அதாவது ஏழைகளின் பக்கம் கடவுள் சார்ந்து நிற்கிறார் என்பதையும் எசாயா எடுத்துக் கூறுகிறார். நற்செய்தியில் இறையரசின் வருகையையும் அதன் பெறுமதியையும் பற்றி இயேசு கூறுகிறார். இறையரசு என்பது ஒருவா் தம்மிடம் உள்ள யாவற்றையும் இழந்து பெற வேண்டிய ஒன்றாகும். அதைப் பெற்றுக் கொள்பவா் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவராய் இருப்பார் என்கிறார் இறைமகன் இயேசு. ஆகவேதான் இயேசுவின் மரணத்தினாலும் சிலுவையினாலும் அருட்செல்வமான தூய ஆவியாரின் கொடைகளைப் பெற்றுக்கொண்ட நாம் எமது வாழ்வை முற்று முழுதாக தியாகம் செய்து இறையரசை உரிமையாக்கிக்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம். எனவே தான் நம்முடைய பழக்கவழக்கங்கள், பேராசைகள், வீணாண எண்ணங்களில் இருந்து விடுபட இறையரசின் மக்களாக வாழ முற்படுவோம்.